16th December 1954]

MR. SPEAKER :—" Now, I shall put the main motion to the vote of the House. The question is—

' That the concurrence of the Legislative Council be obtained in setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members from the Assembly and 8 Members from the Council) to consider the Madras Marumakkattayam (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 16 of 1954) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri M. A. Manickavelu Naicker,
Sri T. C. Narayanan Nambiar,
Sri K. P. Gopalan,
Sri C. H. Kanaran,
Sri P. K. Gopalakrishnan,
Sri K. C. Gopalan Unni,
Sri M. Narayana Kurup,
Sri M. Narayana Nambiar,
Dr. K. B. Menon,
Sri V. Sankaranarayana Menon,
Sri V. R. Krishna Ayyar,
Sri M. Chadayan,
Sri E. K. Sankara Varma Raja,
Sri K. P. Kuttikrishnan Nair,
Sri N. Gopala Menon, and
Sri A. Appu.' "

The motion was put and carried.

(2) THE MADRAS INDEBTED AGRICULTURISTS (TEMPORARY RELIEF) AMENDMENT BILL, 1954 (L.A. BILL NO. 33 OF 1954).

SRI N. K. PALANISAMY :—" Mr. Speaker, Sir, I move—

' *That the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill*, 1954 (*L.A. Bill No.* 33 *of* 1954), *be taken into consideration at once.*' "

SRI S. RAMALINGAM :—" I second the motion, Sir."

MR. SPEAKER :—" Motion moved—

' That the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill, 1954 (L.A. Bill No. 33 of 1954), be taken into consideration at once.' "

* **SRI N. K. PALANISAMY** :—" கனம் சபாநாயகர் அவர்களே, சபையிலே நான் பிரேரித்திருக்கும் மசோதாவைப்பற்றி பேசுவதற்கு முன்பாக கோயம்பத்தூர் ஜில்லா விவசாய சங்கத்தின் சார்பாக 8,500 பேர்களுக்கு மேல் கனம் முதல் மந்திரி அவர்களுக்குக் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றையும் இந்தச் சபையில் சமர்ப்பிக்கிறேன்."

MR. SPEAKER :—" நீங்கள் சபை விதிப்படி முதல் மந்திரி அவர்களுக்கு எழுதப்பட்ட மகஜர் ஒன்றை இந்தச் சபையில் சமர்ப்பிக்க முடியாது. சபை அங்கத்தினர்களுக்கே அட்ரஸ் செய்யப்பட்ட மகஜர்களைத் தான் இங்கே சமர்ப்பிக்கலாம்."

[16th December 1954

* SRI N. K. PALANISAMY :—" கடந்த ஏழு வருஷ காலமாக தொடர்ந்தாற்போல் மழை இல்லாததின் காரணமாக கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதோடு விளைபொருள்களின் விலை ஒரேயடியாக விழுந்து கொண்டிருப்பதன் காரணமாக அவர்களால் வாழ்க்கை நடத்தவே முடியாது இருக்கும் போது எப்படி கடனை அடைக்க முடியுமென்று பார்க்கவேண்டும். ஆகவே தான் கடன் ஒத்திவைப்பு மசோதாவை இன்னும் மூன்று வருஷ காலங்களுக்கு நீடிக்கவேண்டுமென்பதோடுகூட பழைய கடன்களை பதினைந்து வருஷத் தவணைகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுக்கவும் தக்க வசதி செய்து கொடுக்கப்படவேண்டுமென்று அவர்கள், நான் சபையிலே சமர்ப்பித்துள்ள மகஜரில், கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

SRI S. PANCHAKSHARAM :— " On a point of order, Sir. Can the petition be addressed to the Hon. the Chief Minister ? Should it not be addressed to the Members of the Assembly ? "

MR. SPEAKER :—" இந்தச் சபை அங்கத்தினர்களுக்கே அந்த மகஜர் அட்ரஸ் செய்யப்பட்டிருக்வேண்டுமென்று நான் முன்பே அவரிடம் எடுத்துச் சொன்னேன். அது முதல் மந்திரிக்கு அட்ரஸ் செய்யப்பட்டிருக்கிறதா, சபை அங்கத்தினர்களுக்கு அட்ரஸ் செய்யப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. **I have not gone through it. "**

The petition was then passed on to the Hon. the Finance Minister.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I find that the petition is addressed to the Hon. the Chief Minister. I shall pass it on to him. "

1-10 p.m. * SRI N. K. PALANISAMY :—" கனம் சபாநாயகர் அவர்களே, கோயம்பத்தூர் ஜில்லாவில் மட்டுமல்ல. ராமநாதபுரம் ஜில்லாவிலும் இதேமாதிரியான நெருக்கடி முற்றிக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே பெருவாரியாக இருக்கக்கூடிய மக்கள் விவசாயிகள்தான். நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு ஏற்ற ஒரு சூழ் நிலை நாட்டில் இருந்தால் தான் விவசாயிகளின் நிலைமையும் நன்றாக இருக்கும். கடந்த பல ஆண்டுகளாகப் பருவ மழை தொடர்ந்தாற்போல் தவறிக்கொண்டே வந்திருப்பதன் காரணமாக விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கும், கஷ்டத்திற்கும் உள்ளாகியிருக்கிறார்கள். அதனாலேயே பெரும் கடன்காரர்களாகவும் ஆகிவிட்டார்கள். கடந்த ஆண்டிலே மழை சுமாராக இருந்தது என்று சொன்னாலும்கூட விளைச்சல் சரியாக உண்டாகாமல் போய்விட்டது. அத்தோடு பயிர் நன்றாக வந்த இடங்களிலும் கூட பூச்சிகள் விழுந்து பயிரை அழித்திருக்கின்றன. குறிப்பாக மூன்றில் ஒரு பகுதி பூச்சிகளால் நாசம் அடைந்துவிட்டது என்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள். சரியான முறையில் வெள்ளாமை இல்லாததின் காரணமாக அந்த ஏழை விவசாயிகள் இன்றைக்கு எப்படிச் சாப்பிடுவது என்று வழி தெரியாமல் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, உண்ணும் உணவுக்கே திண்டாடிக்கொண்டிருக்கின்றபோது எப்படி அவர்கள் கடனைக் கொடுக்க முடியும் என்பதை நாம்எல்லோரும் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(The Deputy Speaker in the Chair.)

" ஏற்கெனவே அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற கடலை ஒரு மூட்டை விலை 29 ரூபாயாக விற்றுக்கொண்டிருந்தது என்றால் இன்றைய தினம் ஒரு மூட்டை விலை 9 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. முன்பு பருத்தி விலை டன் 150 ரூபாய் இருந்தது என்றால் இன்றைக்கு 85 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. சாதாரணமாக ஒரு விவசாயி ஆயிரம்

16th December 1954] [Sri N. K. Palanisamy]

ரூபாய் கடன் வாங்கியிருந்தால் முதலிலே எழு மூட்டைகள் கடலை விற்றால், போதும், கடனை அடைத்துவிடலாம். ஆனால் இன்றைக்கு கடனை அடைக்க அவன் பன்னிரண்டு மூட்டைகளை விற்றுகவேண்டும். அப்பொழுதுதான் அவனால் கடனை அடைக்க முடியும். அதோடுகூட இன்றையதினம் நாட்டிலே பார்த்தால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களுக்கு மிகக் குறைந்த விலையும், அதே சமயத்தில் அவர்களால் வாங்கப்படுகின்ற பொருள்களுக்கு மிக அதிகமான விலையும் இருந்துகொண்டேயிருக்கின்றன. அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலை இறங்கிக்கொண்டேயிருந்தாலும், அவர்களால் வாங்கப்படுகின்ற பொருள்களின் விலை ஏறிக்கொண்டேயிருப்பதன் காரணமாகத்தான் விவசாயிகளால் வாழ்க்கை நடத்த முடியவில்லை, வாங்கிய கடனையும் அடைக்கமுடியவில்லை.

"குறிப்பாக நமது ராஜ்ய சர்க்காரும், மத்திய சர்க்காரும் கையாளும் முறையினால் விவசாயிகள் வேறு மிக அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையினால் அவர்கள் பெரிதும் சுரண்டப்படுகிறார்கள் என்பதையும் நாம் அறியவேண்டும். விவசாயிகளின் வாழ்வு பெரிதும் பாதிக்கப்படுவதற்கு மத்திய சர்க்காரின் வெளிநாட்டு வியாபாரக் கொள்கையும் ஓரளவு முக்கியமாக இருக்கிறது. குறிப்பாக 1952–53-லே கடலை உற்பத்தி 25 லட்சம் டன் என்று சொல்லுகிறார் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். அப்பொழுது வெளி நாட்டுக்குப் பத்து லட்சம் டன் ஏற்றுமதி செய்ய அனுமதித்துவிட்டார்கள். ஆனால் இந்த வருஷம் பத்து லட்சம் டன் உபரியாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது வெளி நாட்டுக்கு 2½ லட்சம் டன்தான் ஏற்றுமதி செய்யலாமென்று அனுமதித்திருக்கிறார்கள். ஆகவே உள்நாட்டிலே கடலையின் விலை ஒரேயடியாக இறங்கிவிட்டது. எண்ணையின் விலையும் இறங்கிவிட்டது. ஆனால் அதே சமயத்தில் அந்த எண்ணைகளைக்கொண்டு தயாரிக்கப்படுகின்ற சோப்பின் விலை இறங்கவில்லை.

"இதேமாதிரியாகத்தான் பருத்தியின் விலை பொதி 150 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக இறங்கிவிட்டது. ஆனால் துணியின் விலையும் இறங்கவில்லை. நூலின் விலையும் இறங்கவில்லை. பருத்தி விலை இறங்கிய உடனேயே நூலின் விலை இறங்குவதற்குப் பதிலாக முன்பிருந்த விலையைவிட முப்பது ரூபாய் அதிகமாகியிருக்கிறது. இப்படி விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலை இறங்கிக்கொண்டேயிருக்கும்போது, அவர்கள் வாங்கக்கூடிய பொருள்களின் விலை இறங்காமல் ஏறிக்கொண்டே போனால் அவர்களால் எப்படி ஜீவிக்க முடியும். வாங்கிய கடனை அடைக்க முடியும். நாட்டில் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட fluctuation-னால் தான் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள விவசாயிகள் படுகின்ற கஷ்டம் சொல்லமுடியாது. இப்படிப்பட்ட நெருக்கடி வறண்ட பிரதேசங்களில் தான் இருக்கிறது. செழிப்புள்ள பிரதேசங்களில் இல்லையென்று சொல்லலாம். ஆகவே குறிப்பாக கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள கோபியை எடுத்துக்கொள்ளலாம். கோபியில் தண்ணீர் இல்லையென்ற பஞ்சம் கிடையாது. ஏராளமாகத் தண்ணீர் இருக்கிறது. ஆனால் வறண்ட பிரதேசத்திலுள்ளவர்களைக் காட்டிலும் இங்குதான் கடன்காரர்களின் எண்ணிக்கை அதிகம். காரணம் இந்தப் பிராந்தியத்தில் நெல் விலை இறங்கிவிட்டது. கோதுமை விலையும் இறங்கிவிட்டது. ஆனால் இந்திய சர்க்கார் தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அமெரிக்காவிலிருந்து கோதுமை இறக்குமதி செய்கிறார்கள். அதைப்போலவே பருத்தி விலை ஒரேயடியாக இங்கே இறங்கிவிட்டது. ஆனால் அமெரிக்காவிலிருந்து ஒப்பந்தம் செய்துகொண்டபடி பருத்தி இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நெல்லின் விலை இங்கே இறங்கிவிட்டது. வெளி நாட்டிலிருந்து நெல் இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்துகொண்டபடி இவ்வாண்டும் இறக்குமதி செய்தே தீரப்போகிறார்கள். குறிப்பாக 1948-ம் வருஷத்தில் செய்துகொண்ட ஒப்பந்தம் எதையும் மாற்றமுடியாதென்று சமீபத்தில் ஸ்ரீ தேஷ்முக் அறிவித்துவிட்டார்.

[Sri N. K. Palanisamy] [16th December 1954

"இந்த மாதிரியான சீர்கேடான கொள்கையினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றவர்கள் இந்நாட்டிலுள்ள விவசாயிகள்தான். விவசாயிகளின் கடன் பளுவை குறைக்க சர்க்கார் முற்படவில்லை. அதே சமயத்தில் அவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பத்தை சிறிதளவாவது குறைக்கவேண்டுமென்று கருதி கடன் ஒத்திவைப்பு மசோதாவைக் கொண்டு வந்தால் அதனால் விவசாயிகளுக்கு சிறிதளவுகூடப் பயன் கிடையாது எனப் பெரிய பெரிய நிலப்பிரபுக்களும், பாங்கர்களும், வியாபாரிகளும் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். உண்மையிலேயே விவசாயிகளின்பால் இவர்களுக்கு அக்கறையிருக்குமேயானால் அவர்களுடைய கஷ்டத்திற்குக் கை கொடுத்து உதவ குறைந்த வட்டிக்குப் பணம் கடன் கொடுக்க முன் வந்திருக்கிறார்களா என்று நான் கேட்கிறேன். உண்மையிலே அவர்கள் மிக அதிக வட்டிக்கு விவசாயிகளுக்குப் பணம் கடன் கொடுத்து அவர்களது உழைப்பையெல்லாம் சுரண்டிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சட்டம் வந்ததினால் அவர்களால் விவசாயிகளை எந்த வகையிலும் துன்பப்படுத்த முடியவில்லை. ஆகவே தான் இந்தச் சட்டத்தை பலமாக மறைவில் இருந்தும் எதிர்க்கிறார்கள். பகிரங்கமாகவும் எதிர்க்கிறார்கள்.

"விவசாயிகள் எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள் என்பது இங்குள்ள மந்திரிமார்களுக்கு எல்லாம் தெரியும். சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கு எல்லாம் தெரியும். இவர்கள் எல்லோருக்கும் தெரியவேண்டுமென்பதற்காகவே விவசாயிகள் பல இடங்களில் மகாநாடுகள் நடத்தியிருக்கிறார்கள். குறிப்பாக திருவண்ணாமலையில் ஒரு விவசாயிகள் சங்க மகாநாடு நடத்தப்பட்டிருக்கிறது. திருநெல்வேலியிலே ஒரு மாகாநாடு நடத்தப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர் ஜில்லாவிலே பேரூர் போன்ற இடங்களிலும், கோபு போன்ற இடங்களிலும், தாராபுரம் போன்ற இடங்களிலும் பல மகாநாடுகள் நடத்தியிருக்கிறார்கள். அங்கெல்லாம் இந்தக் கடன் ஒத்திவைப்பு மசோதாவை மூன்று ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கனம் முதல் மந்திரி அவர்களுக்கு இது நன்கு தெரியும். சில மகாநாட்டிற்கு அவரே தலைமை தாங்கியிருக்கிறார். அங்கெல்லாம் விவசாயிகளுடைய நிலைமையை கவனிப்பதாகச் சொல்லி வந்துவிட்டு இங்கே கடன் ஒத்திவைப்பு மசோதாவை ஒரு இருபது நாட்களுக்கே நீட்டி வைக்கிறார்கள். ஜனங்களிடம் பேசுவது வேறு, அங்கே சொல்வது வேறு, ஆனால் இங்கே செய்கின்ற காரியங்கள் எல்லாம் வேறுகத்தான் இருக்கின்றன. திட்டவட்டமாக விவசாயிகள் படுகின்ற கஷ்டத்தை உணர்ந்து இந்தக் கடன் ஒத்திவைப்பு மசோதாவை மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கச் செய்வதை விட்டு இதைப்பற்றி பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியை நியமிப்பது வெறும் கண் துடைப்பு வேலைதான். நிச்சயமாக விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு இருந்தால் அந்தச் சட்டத்தை நீடிக்கும்படி செய்கிறோம் என்று பட்டவர்த்தனமாக ஏற்கெனவே சொல்லியிருப்பார்கள்.

"ஏற்கெனவே பல பிரதேசங்களில் இந்தமாதிரியான சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சட்டம் சம்பந்தமாக கட்கில் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது என்பதைப் படிக்கிறேன்—

'The Gadgil Committee recommended that the debts of agricultural producers should be adjusted. These recommendations were endorsed by the Agrarian Reforms Committee.

'The debt of agricultural producers should be compulsorily adjusted without waiting for applications from borrowers by bbards managed by judicial officers.'

16th December 1954] [Sri N. K. Palanisamy]

" ஆகவே உண்மையாகவே விவசாயிகளிடத்தில் சர்க்காருக்கு அக்கறை இருக்குமானால் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை நீடிப்பதால் அவர்கள் கஷ்டம் நீங்குமென்று நான் கருதவில்லை. அவர்கள் வாங்கியிருக்கக் கூடிய கடனை இருபது, இருபத்தைந்து வருஷங்களுக்குள் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இதுமாதிரியான சட்டத்தைப் பல ராஜ்ய சர்க்கார்கள் செய்திருக்கின்றன.

" The Uttar Pradesh Temporary Regulation of Execution Act, 1934, was enacted with a view to stay the execution of proceedings against judgment debtors. 1-20 p.m.

" The Punjab Debt Conciliation Act of 1934.

" The Bengal Agricultural Debts Act, 1935.

" The Assam Debt Conciliation Act of 1935.

" இந்தச் சட்டங்களை நாம் எல்லோரும் எடுத்துக்கொண்டு பார்த்தால் இவைகள் பதினைந்து வருஷங்களிலிருந்து, இருபது வருஷங்களுக்குள் தான் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவர்கள் எந்த அடிப்படையில் இந்தச் சட்டங்களைக் கொண்டு வந்தார்களோ, அதே அடிப்படையில் தான் இன்றையதினம் நமது ராஜ்யத்திலும் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

" கடந்த ஆறு, ஏழு வருஷங்களாகவே பருவ மழை தவறியிருக்கிறது. வெள்ளாமையும் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பூச்சி வேறு விழுந்து பயிர்கள் நாசமாகியிருக்கின்றன. கிராமப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் வேறு மிக அதிகமாக இருக்கிறது. ஒரு வருஷ காலம் இந்தக் கடன் மசோதாவை ஒத்திவைத்தாலும் கூட ஒரு வருஷத்திற்குப் பிறகாவது அவர்கள் நிலைமை சீர்படுமா என்று சொல்வதற்கில்லை. ஆகவே சிறு நில விவசாயிகளின் நிலைமையையாவது சர்க்கார் கவனத்தில் வைத்துக்கொண்டு குறைந்தது மூன்று வருஷ காலத்திற்கு இந்தக் கடன் மசோதாவை ஒத்திவைக்கவேண்டும். அதற்குப் பிறகு படிப்படியாக கடனை பதினைந்து வருஷத் தவணைகளிலோ, பத்து வருஷத் தவணைகளிலோ திருப்பிக்கொடுக்க உத்திரவு செய்யவேண்டும். விவசாயிகள் படுகின்ற கஷ்டத்தைச் சொல்லமுடியாது. விவசாயிகள் இந்தக் கடன் மசோதா ஒத்திவைக்கப்படவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் பாங்கர்கள், பெரிய நிலச்சுவான்தார்கள், வியாபாரிகள் இவர்கள்தான் இந்தக் கடன் மசோதா ரத்து செய்யப்படவேண்டுமென்று பலமாக மறைவிலேயும், வெளியிலேயும் நின்றுசொண்டு பிரசாரம் செய்கிறார்கள். இதைக்கண்டு சர்க்கார் விவசாயிகளின் நிலைமையை அந்தரத்தில் விடாமல் அவர்களை எல்லாம் காப்பாற்ற இந்தக் கடன் மசோதாவை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI V. MADANAGOPAL :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ என்.கே. பழனிசாமி கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவை ஆதரித்து சில விஷயங்களை சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கடன் ஒத்திவைப்பு மசோதா சம்பந்தமாக இன்றைக்கு சபையில் மிகவும் முக்கியமான விஷயமாகக் கருதப்பட்டு அதன்மீது விவாதம் நடந்து வருகிறது. இந்த நேரத்தில் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை மேலும் மூன்று வருஷங்களுக்கு நீடிக்கவேண்டுமென்று கோருகிறபோது, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய லேவாதேவி முறையானது எத்தன்மையதாக இருக்கிறதென்பதை சர்க்கார் மிகவும் ஆலோசிக்கவேண்டும். கிராமப் புறங்களில் ஏன்றும் இல்லாத அளவுக்கு வட்டி விகிதமானது கொடிய முறையில் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது. இந்த லேவாதேவி முறை தேசிய உற்பத்தியையும் இந்த ராஜ்யத்தின் பொருளாதார வாழ்வையும் சீர்

குலைக்கக்கூடிய தன்மையில் இருக்கிறது. குறிப்பாக, தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களில் ஒரு ஏக்கர் நிலத்திற்கு குத்தகை 20 மூட்டை நெல் ஆக இருக்கிறது—இரண்டு போகத்திற்கும் சேர்த்து. இப்படிப்பட்ட ஒரு ஏக்கர் நிலம் மூவாயிரம் ரூபாய் வரையில் கிரயம் பெறும். இந்த மூவாயிரம் ரூபாய்க்கு வட்டி எவ்வளவு என்று பார்த்தால் நூற்றுக்கு வருஷத்திற்கு ஒரு மூட்டை நெல் என்ற நிலைமை பெரும்பாலும் இன்றைக்கு நிலவுகிறது. அப்படியானால், மூவாயிரம் பெருமானமுள்ள ஒரு ஏக்கர் நிலத்திற்கு 30 மூட்டை நெல் வட்டி மூலமாக வருமானம் வரக்கூடிய லேவாதேவி முறையாக இருக்கிறது. ரூ. 100-க்கு மாதமொன்றுக்கு ரூ. 1 முதல் ரூ. 5 வரையில் வட்டி செலுத்தக்கூடிய முறை இப்பொழுது கிராமத்தில் வழக்கமாக இருக்கிறது. சராசரி நூற்றுக்கு மாதத்திற்கு இரண்டு வட்டி என்று வைத்துக்கொண்டபோதிலும் 100-க்கு வருஷத்திற்கு 24 வட்டி என்று ஆய்விடுகிறது.

"சர்க்கார் போட்டிருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணம் கிடைக்கவில்லை என்று நாம் கூறுகிறோம். விவசாயிகளிடத்தில் சர்க்கார் கடன் கேட்க ஆரம்பிக்கிறார்கள். விவசாயத் துறையிலுள்ளவர்கள் ஏதாவது பணம் மீதம் வைத்திருந்தால் அதை வட்டிக்கு விடுகிறார்கள். அப்படி வட்டிக்கு விடுவதன்மூலம் 24 சத விகிதம் வரையில் லாபம் சம்பாதிக்கக்கூடிய நிலை இருக்கும்போது சர்க்கார் கொடுக்கக்கூடிய 3½ சத விகிதம் வட்டிக்கு யார் சர்க்காருக்குக் கடன் கொடுக்க முன் வருவார்கள் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். கிராமப்புரங்களிலுள்ள எந்த மிராசுதார்களும் லேவாதேவிக்காரர்கள் தாங்கள் சேமித்து வைத்திருக்கும் பணத்தைச் சர்க்காருக்கு கடன் கொடுக்கப் போவதில்லை. இன்றைக்கு கிராமப்புரங்களில் மீதமாகக்கூடிய பணம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வருகிறதில்லை. விவசாயிகளைக் கடுமையாக சுரண்டுவதின்மூலம் விவசாயிகளுடைய வாங்கும் சக்தி குறையக்கூடிய அபாயம் ஏற்படுகிறது.

"கடன் ஒத்திவைப்புச் சட்டத்தைப்பற்றி, சபையிலும் சரி, வெளியிலும் சரி, பத்திரிகையிலும் சரி பல அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடன் ஒத்திவைப்புச் சட்டம் ஏற்கெனவே கொண்டுவந்ததால் விவசாய உற்பத்தியைப் பெரிய அளவு பாதித்திருக்கிறது என்ற அபிப்ராயம் ஒரு சாராரிடையே இருக்கிறது. அது சரியல்ல. அது உண்மைக்கு மிகவும் பொருத்தமில்லாத விஷயம். ஒரு வருஷத்திற்கு கடன் ஒத்திவைப்புச் சட்டம் அப்பொழுது வந்திருக்காமற்போனால், தமிழ் நாட்டிலுள்ள லட்சக்கணக்கான விவசாயிகள் கையிலிருக்கக்கூடிய துண்டு துக்காணியைக்கூட இழந்துவிட்டு, வேலையில்லாத் திண்டாட்டத்தில் சேர்ந்துகொள்ளவேண்டிய அபாயம் ஏற்பட்டிருக்கும்.

"இன்றைக்கும்கூட இந்தச் சட்டத்தைப்பற்றி பேசும்போது, இந்தக் கடன் ஒத்திவைப்புச் சட்டம் கொண்டுவரக்கூடிய காலத்தில் விவசாயிகள் மொத்தத்தில் எந்த நிலையில் இருந்தார்களோ அந்த நிலையில் இருந்து முன்னேற்றமடைந்துள்ளார்கள். ஆகவே, இதை நீடிக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற வாதம் பேசப்படுகிறது. அது சரியல்ல. விவசாய மக்கள் முன்னைவிட மேலும் அதிகமான நெருக்கடிக்கு இப்பொழுது உள்ளாகியிருக்கிறார்கள். ஏனென்றால், இன்றைய பத்திரிகைகளில், மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களில் இருக்கக்கூடிய நிலைபற்றி கலெக்டர்களின் ஸ்டேட்மெண்ட்டுகள் வந்துள்ளன. அந்தப் பிரதேச மக்களில் பெரும்பாலும் வைகை, தாம்பிரபரணி தவிர புஞ்சை, மானாவாரி பூமியைக்கொண்டு வெள்ளாமை முழுவதும் விவசாயிகள் கஷ்டப்பட்டு விவசாயம் செய்த பயிர்களெல்லாம் அங்கு பயிர் வந்தவுடனே சரியான காலத்தில் மழை இல்லாமல் எட்டு வாரமாக புஞ்சைப் பயிர் முழுதும் நாசமாகிவிட்டது. சமீபத்தில் பெய்த மழையினால் எந்த வித பலனுமில்லாமல் பயிர்கள் கெட்டுவிட்டன. இந்த மூன்று ஜில்லாக்களைத்தவிர மற்ற தமிழ் ஜில்லாக்களிலுள்ள பயிர்கள் முழுதும் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்திகளும் வந்துகொண்டிருக்கின்றன.

16th December 1954] [Sri V. Madanagopal]

"மேற்சொன்ன இயற்கையினால் பயிர்கள் பாதிக்கப்பட்டது தவிர, அதை விட பயங்கரமான ஆபத்து விவசாயப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய விலைவாசிகளின் வீழ்ச்சி. நண்பர் ஸ்ரீ பழனிசாமி கூறும்போது சில விஷயங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். நானும் இது விஷயமாக ஓரிரண்டு வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். எண்ணெய் வித்துக்களின் விலை ஒன்றுக்குப் பாதியாக இப்பொழுது குறைந்திருக்கிறது. 80 பவுண்டு கொண்ட கடலை மூட்டை யொன்று 20 ரூபாயாக இருந்தது இப்பொழுது 10 ரூபாயாக குறைந்திருக்கிறது. மதுரை ஜில்லாவில் ஒரு மணு வெல்லத்தின் விலை ரூ. 6 ஆக இருந்தது 'இப்பொழுது இரண்டு ரூபாய்க்கு வாங்குவாரில்லை' கரும்பு விவசாயம் செய்பவர்கள் பயிர்ச் செலவுக்குக் கூட கட்டுப்படியாகாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எள்ளு மூட்டை ஒன்று ரூ. 100 ஆக இருந்தது இப்பொழுது ரூ. 32, ரூ. 33-க்கு குறைந்திருக்கிறது. பருத்தி, புகையிலை ஆகியவைகளின் விலையும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. இவையெல்லாம் தவிர இன்னும் வேடிக்கையானது என்னவென்றால் இன்று ஒரு டன் ஈர வெங்காயத்தின் விலை தமிழ் நாட்டில் ரூ. 15 என்று இருப்பது சிங்கப்பூரில் ரூ. 250 ஆக இருக்கிறது. அப்படி அதிகப்படியாக கிடைக்கும் ரூபாய் ஈர வெங்காயம் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. விவசாயிகளுக்குக் கிடைப்பது ரூ. 15, ஆனால் விற்கக்கூடிய விலை ரூ. 250. இந்த லாபம் யாருக்குப் போகிறது ? இடையில் இருப்பவர்களுக்கு, அதாவது ஏற்றுமதிக்கு பர்மிட் வாங்கியிருக்கிறார்களே அவர்களுக்கு இந்த லாபம் போய்க் கொண்டிருக்கிறது. விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காததின் காரணமாக சென்ற வருஷத்தில் இருந்ததைவிட கடுமையாக இன்றைக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் சட்டத்தை நீடிக்கவேண்டும் என்று கூறும்பொழுது அநியாய வட்டியைத் தடுக்கவேண்டும் என்பதற்காகவும் கொடுக்கக்கூடிய கடனை தவணை தவணையாக வசூல் பண்ணவேண்டும் என்ற நோக்கத்துடனும் தான் இந்தச் சட்டத்தை நீடிக்கவேண்டுமென்று கேட்கிறோம். சர்க்கார், தாங்களே இது சம்பந்தமாக ஒரு சட்டம் கொண்டு வரப்போகிறோம், ஆகவே, இதை நீடிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கூறலாம். இந்தச் சட்டத்தை சில விதி விலக்குகளோடு இன்றுள்ளபடி நீடித்தால் போதும். இன்றைக்குக் கூட கிராமப்புறங்களில் கோர்ட்டில் நடவடிக்கை எடுக்க முடியாமல் லேவாதேவிக்காரர்கள் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு வட்டி வேண்டாம், கட்டாயமாக பாண்டு எழுதி இருக்கக் கூடிய தொகை வேண்டாம், கொடுக்கும் பணத்தைக்கூட கொஞ்சம் கொஞ்சமாக கொடுங்கள் என்று கேட்கும் நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது. இந்தச் சட்டம் மேலும் நீடித்தால் வேறு சட்டம் தேவை இல்லை. கோர்ட் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் லேவாதேவிக்காரர்கள் தவணையில் வாங்கிக் கொள்வார்கள். கிராமத்தில் கடன் வசதி அற்றுப் போகிறது என்ற ஒரு வாதம் இருக்கிறது. அது சரியல்ல. கிராமப் புறங்களில் எட்டணு, ஒரு ரூபாய் வரை வட்டி கொடுத்து கடன் வாங்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள். அநீதியாக கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதே ஒன்றுக்கு இரண்டாக எழுதி வாங்கியிருக்கிறார்களே அந்தக் கடன்கள் தான் தடைப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் உடனடியாக விவசாயிகளிடம் வசூல் பண்ணுவதை அனுமதித்தால் அவர்களுக்கு கட்டுவதற்கு எந்தப் பாதையும் இல்லாமல் சின்னஞ்சிறு விவசாயி கையில் இருக்கக் கூடிய நிலத்தையும், ஆடு மாடுகளையும் இழந்துவிட்டு வேலை இல்லாமல் திண்டாடுவோர்களுடன் சேர்ந்து கொள்ளக்கூடிய நிலைமை தான் ஏற்படும். இந்த நாட்டின் பொருளாதார வாழ்வுக்கே மிக அபாயகரமான நிலைமை ஏற்படும். ஆகவே, இந்தச் சட்டத்தை நீடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கின்றேன்."

DEPUTY SPEAKER :—"The House will now rise for lunch and meet again at 2-30 p.m."

The House then adjourned.

[16th December 1954

(After lunch—2-30 p.m.)

* SRI K. T. RAJU :—" கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ பழனிசாமி கொண்டுவந்திருக்கும் மசோதாவை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இன்றைய தினம் விவசாயிகளின் நிலைமை எப்படி இருக்கிறது என்றால் ' கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினன் இலங்கை வேந்தன் ' என்னும் பழமொழிக்கு இலக்காயிருக்கிறது. இன்றைக்கு நம் நாட்டில் ஏழை விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் பெரிய அளவில் கடன்களால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைய தினம் நம் நாட்டில் 100-க்கு 80 பேர்களுக்கு மேல் விவசாயிகள் இருக்கிறார்கள். இந்த நாடு சுபிட்சமாக இருக்கவேண்டு மென்றால் இந்த நாட்டிலுள்ள விவசாய மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைய வேண்டும். இந்த நாடு சகல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமென்றால் ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். அதற்கு ஏழை விவசாயிகள் அவர்களுடைய தொழிலில் முன்னேறினால் தானே முன்னேற்றத்தைக் காண முடியும். இந்த நாட்டு மக்கள் பெரிய அளவில் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டிருப்பதால் ஒரு விதமான முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. நீண்டகாலமாக பெரிய அளவு நடுத்தர மக்கள் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்காகவும், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்பதற்காகத் தான் இந்த மசோதாவைப் பிரேரேபித்ததின் நோக்கம். கடன் ஒத்திவைப்பு மட்டும் இவர்களுடைய பிரச்னையைத் தீர்த்துவைக்க முடியாது என்பதை நாம் தெரிந்துக் கொண்டோம்.

" இந்நாட்டிலுள்ள விவசாயிகள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொண்டால்தானே அவர்களுடைய வாழ்க்கை முன்னேற முடியும். இன்றைக்கு இந்த மசோதாவைக் கொண்டு வந்ததின் நோக்கம் என்னவென்றால், மூன்று வருடத்திற்கு அவர்களுடைய கடன்களை ஒத்திவைப்பதற்குத்தான். இந்த மசோதாவினால் ஏழை விவசாயிகள் திருப்தி அடைய முடியாது. ஆனால் இன்றைய நிலைமையில் இந்த மசோதா அவர்கள் மூச்சு விடுவதற்கு கொஞ்சம் அவகாசம் கொடுக்கிறது. இந்த நாட்டில் இன்றைய தினம் விவசாயிகள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆதலால் நாம் செய்யப்படும் திட்டங்கள் எல்லாம் அவர்களின் நன்மையைக் கருதித் தான் செய்கிறோம். இன்றைக்கு நம் நாட்டில் உற்பத்தியாகும் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்யும் நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு இருக்கவேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் மூலமாகத் தான் அவர்களின் வாங்கும் சக்தி அதிகரிக்க முடியும். அவர்களின் வாங்கும் சக்தி உயர்ந்தால்தானே, அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் உயரும். ஆனால் இன்றைக்கு பொருளாதாரத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில் பெரும் பகுதி அல்லது பெரும்பாலானவை அவர்களுடைய கடன்களுக்கு வட்டியாகவே செலுத்தப் படுகிறது. இந்த நிலைமையில் அவர்கள் இன்று இருக்கிறார்கள். நீண்ட காலமாக கடன் வாய்ப்பட்டு இருக்கும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றால் முதலில் அவர்களுடைய கடன்களை அடைக்கக் கூடிய தகுந்த முறையை அவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு ஒரு வழி செய்தால்தான் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி அடையும். அவர்களின் நிலைமை முன்னேறுவதன் மூலமாகத்தான் நாட்டில் சுபிட்சம் காண முடியும். ஆகையால் நம்முடைய சர்க்கார் இந்த விஷயத்தில் அதிகமான காலத்தைச் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

" மேலும் அங்கத்தினர் மதனகோபால் அவர்கள் சொன்னதுபோல் நாட்டில் உற்பத்தி அதிகமாகயிருந்தபோதிலும் அவர்களுடைய நிலைமையில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. காரணம் என்னவென்றால் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு ஒரு நியாயமான விலை

16th December 1954] [Sri K. T. Raju]

கிடைப்பது இல்லை. அதனால்தான் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் அவர்கள் கடனுக்கு, வாங்குகிற கடன்களுக்குச் சரிகட்டுவதற்காகவே பெரும் பாலான பணம் போகிறது. அப்படி இருப்பதால்தான் அவர்களுடைய பொருளாதார நிலைமை சீர் கெட்டு போய்க் கொண்டு வருகிறது. அவர்களுடைய கடன்களுக்கு நிவாரணம் அளிக்க ஒரு திட்டம் வகுத்தால் தான் அவர்களுடைய நிலைமையை மாற்றமுடியும். நம் சர்க்கார்கூட இந்த வருஷ முதலில் கடன் ஒத்திவைப்புச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். அச்சட்டத்தினால் அவர்களுடைய கடன்களுக்கு ஒரு வித நிவாரணமும் அளிக்கப்படவில்லை. தவிர அவர்களுக்கு இந்த கடன்களை வாங்குவதற்கே எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாகவேண்டியிருக்கிறது. சாதாரணமாக அவசரமாக குடும்பச் செலவிற்கு பணம் தேவையென்றால் அவர்கள் ரூ. 100-க்கு மேல் பாண்டு எழுதிக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கடன் கொடுக்கிறவர்கள் இம்மாதிரி அதிகப் பணத்திற்கு பாண்டு எழுதிக் கொடுக்கும்படி அவர்களை கஷ்டப்படுத்துகிறார்கள். உண்மையாகப் பார்க்கப் போனால் அவர்களுடைய கடன்கள் பாதிக்கு மேல் இப்படித்தான் இருக்கும். ஆதலால் இம்மாதிரி நீண்டகால கடன்களால் ஏழை விவசாயிகள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஆராய்ந்து, அதை நிவர்த்திப்பதற்கு வழி வகைகள் என்ன என்பதை ஆலோசித்து இந்த சபையில் ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். நம் நாடு வளர்ச்சி பெற்று முன்னேறவேண்டுமானால், அவர்களுடைய கடன்களுக்கு நிவாரணம் அளிக்க சில சலுகைகள் அளிக்கவேண்டும். அவர்கள் கடன் இல்லாமல் இருந்தால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும். வாழ்க்கைத் தரம் உயர்ந்தால்தான் நாடு முன்னேற்றம் அடையும் என்று சொல்லமுடியும். அப்போதுதான் நம் நாட்டில் சுபிட்சம் ஏற்படும்.

(The Deputy Speaker in the Chair.)

"ஆகவே இந்தச் சட்டத்தை இன்னும் மூன்று வருஷங்களுக்கு ஒத்தி வைப்பதனால் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும் என்பது இந்த மசோதாவை பிரேரேபித்தவருடைய நோக்கம் இல்லை. விவசாயிகளுக்கு உறுப்படியான ஒரு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்பது தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்தவருடைய நோக்கம். அவ்விதம் நிவாரணம் அளித்து நாட்டிற்கு சுபிட்சத்தை உண்டாக்க வேண்டும் என்றுதான் அவர் இதைக் கொண்டு வந்திருக்கிறார். அதன் பின் தான் தொழில் வளர்ச்சி ஏற்படும். சர்க்காருக்கு தங்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு பணம் சேர்ந்துவிடும். எந்த விதத்திலும் சர்க்காருக்கு பணம் கிடைத்துவிடும். ஏனென்றால் இப்பொழுது ஜனங்களிடம் ஏராளமாகப் பணம் இருக்கிறது. அவர்களும் கொடுத்து விடுவார்கள். அவ்விதம் ஜனங்களிடத்தில் பணம் புழங்கி வருவதானால் சர்க்காருக்கு வேண்டிய பணம் வந்து விடுகிறது. இந்த சட்டத்தினால் குடியானவர்களுக்கு எந்த அளவில் உதவி அளிக்கப் போகிறார்கள் என்பதைத் தான் பார்க்க வேண்டும். குடியானவர்களுக்கு இந்த சட்டத்தை ஒத்தி வைப்பதன் மூலம்தான் பரிகாரம் கிடைத்து விடும் என்று நினைக்கக் கூடாது. அவர்களுக்கு சரியானபடி பரிகாரம் கிடைக்க வேண்டுமென்றால் அதற்கு வேறு வழிகளில் வழிவகை செய்ய வேண்டும். எந்த விதத்தில் செய்யப்போகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறும் லேவாதேவிக்காரர்கள் கையில் அதை விட்டுவிடக் கூடாது. அவ்விதம் இல்லாமல் குடியானவர்களுக்கு குறைந்த வட்டியில் நியாயமான முறையில் பணம் கிடைப்பதற்கு சர்க்கார் வழி வகை காணவேண்டும். அந்தக் காரியத்தை சர்க்கார் செய்யப் போகிறார்களோ என்னமோ தெரியவில்லை. அதற்காக இந்த விஷயத்தை சர்க்கார் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த வழியில் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குத்தான் நாம் இந்த நாட்டில் இருக்கிறோம். இந்த அடிப்படையில் நான் இந்த மசோதாவை ஆதரித்துக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். 2-40 p.m.

* **Sri P. VENKATESHA SHOLAGAR** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கடன் ஒத்தி வைப்புச் சட்டம் கொண்டு வந்ததின் மூலம் விவசாயிகளுடைய நிலைமை பெருகிவிட்டதாகவும் இந்தக் கடன்

ஒத்திவைப்புச் சட்டத்தினால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டதாகவும் யாரும் கூறவில்லை. இப்பொழுதும் அவர்கள் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் உள்ளார்கள். அவர்களுக்குப் பொருளாதார வசதியும் ஏற்பட்டு விடவில்லை. மேலும் மேலும் அவர்கள் உற்பத்தி பண்டங்களின் விலை வீழ்ச்சி அடைந்து கொண்டுதான் வருகிறது. அதனால் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடையவில்லை. இந்த நிலையில் இருக்கும் அவர்கள் வாங்கிய கடனை உடனடியாக வசூல் செய்ய சந்தர்ப்பம் கொடுத்து விட்டால் அவர்கள் பெரிய நெருக்கடிக்கு ஆளாக வேண்டியதாகி விடுவதோடு அவர்கள் தாங்கள் சாகுபடி செய்ய வேண்டியதற்கு மூலாதாரமில்லாமல் போய் வெறும் ஒட்டாண்டியாகவேண்டியதாக இருக்கும். உண்மையிலேயே அவர்கள் கடன் வாங்கியிருந்தால் அக்கடனை கொடுக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அந்த நிலைமையில் பல பேர்கள் கடன் வாங்கவில்லை. ஆகவேதான் அவர்கள் வாங்கிய கடனை ஒத்தி வைக்கப்படவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிலருக்கு ஏற்பட்டிருக்கும் கடனானது மிகவும் மோசமான நிலைமையில் ஏற்பட்டிருக்கிறது.

"என்னுடைய கிராமத்துக்குப் பக்கத்தில் பெரிய பண்ணை ஒன்று இருக்கிறது. பெயரளவில்தான் விவசாயிகள் நிலச்சுவாந்தாருக்கு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். கண்டு முதல் இல்லாத நிலத்தில் வார பாக்கிக்காக அவ்விதம் கடனை எழுதி வாங்கியிருக்கிறார்கள். அதற்குக் 'கானு பாக்கி' என்று பெயரும் வைத்து இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்கில் விவசாயிகளுடைய கையெழுத்தை வாங்கப்பட்டுள்ளது. "கானு பாக்கி" என்று பெயர் வந்த காரணம் கானுத மகசூலுக்கு தான். இந்த மாதிரி பல மோசமான பத்தரங்கள் எழுதி வாங்கப்பட்டு விவசாயிகளை கடனாளிகளாக்கியிருக்கிறார்கள் அது மாத்திரம் அல்ல, பல தோழர்கள் சொன்ன மாதிரி ரூ. 100-க்கு ரூ. 150 என்றும் எழுதி வாங்கி இருக்கிறார்கள். இந்த மாதிரி எழுதி வாங்கியவைகளுக்கு எத்தனை தவணைகளில் வட்டி கட்டினாலும் அந்தக் கடன் வளர்ந்து கொண்டே இருக்கும். வட்டி கொடுக்கக் கொடுக்க கடன் நீடித்துக் கொண்டேயிருக்கும். இந்த மாதிரியான கடன் பத்திரங்களை பரிசீலனை செய்ய வேண்டியது சர்க்காருடைய கடமை. எந்த விதத்தில் கடன் ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவு வட்டி கட்டப்பட்டிருக்கிறது என்பவைகளை யெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டும் அதற்கு வேண்டிய சட்டத்தை இயற்றி விவசாயிகள் எவ்வளவு கட்ட முடியும் என்பதையும் பரிசீலனை செய்துதான் அதன் பிறகு இந்தக் கடனை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒட்டு மொத்தமாக இந்தக் கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தை இப்பொழுதே நீடிக்காமல் விட்டு விட்டால் பெரிய பயங்கரமான நிலைமை ஏற்பட்டு விடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆகவே சரியான முறையில் பரிசீலிக்காமல் இந்தச் சட்டத்தை ரத்து செய்து விடக்கூடாது. கொடுத்த கடனை கேட்கும்போது எப்படிப்பட்ட கடனை கொடுக்க வேண்டும் என்று பரிசீலிக்காமல் இந்த ஒத்திவைப்புச் சட்டத்தை ரத்து செய்துவிட்டால் விவசாயிகளுடைய பிரச்னை தீர்ந்து விடப்போவது இல்லை. அவ்விதம் ரத்து செய்தால் அவர்களுடைய நிலைமை சீர் கெட்டு விவசாயித்திற்கு பங்கம் ஏற்பட்டு உற்பத்தி தடைபடும். இதையெல்லாம் பரிசீலனை செய்து இந்தக் கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தை நீடித்து அதற்காக வழிவகை செய்து கொண்டுதான் இந்த சட்டத்தை ரத்து செய்ய வேண்டும். அப்படியில்லாமல் இத்துடன் விட்டுவிடக் கூடாது. ஆகவே இந்த சட்டத்தை நீடிக்க வேண்டும் என்று நான் சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்."

* **Sri A. VELOO** :—"கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கும் கடன் ஒத்தி வைப்புச் சட்டத்திருத்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளை நான் பேச ஆசைப்படுகிறேன். குறைந்த வாரம், கூடுதலான குத்தகை, கூலிக் குறைவு, லேவாதேவிக்காரர்களால் அதிகப்படியான வட்டி வாங்குவது

16th December 1954] [Sri A. Veloo]

முதலிய பரிதாபகரமான நிலையில் குடியானவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு சர்க்கார் சென்ற ஆண்டில் ஒரு கடன் நிவாரண ஒத்திவைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து அதையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதை மறுபடியும் மூன்று வருஷங்களுக்கு ஒத்திவைத்து நீடிக்க வேண்டுமென்று கனம் பழனிசாமி அவர்கள் இப்பொழுது ஒரு திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன்.

"நாட்டில் மக்களுக்கு முக்கியமானதும் கண் போன்றவையுமானது விவசாயம்தான். விவசாயப்பொருளின் உற்பத்தி உயர்ந்தால்தான் நாடு முன்னேற முடியும். உற்பத்தியில் நம் நாடு தாழ்ந்த நிலையில் இருக்கும்போது விவசாயிகள் நாளுக்கு நாள் முன்னேற்றமடைய முடியாமல் கடன் தொல்லையால் நாளுக்கு நாள் அழிந்து கொண்டே போகிறார்கள். இவர்களுடைய குறைகளைத் தீர்க்க சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியம். அதனால் சர்க்கார் அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கவேண்டும். விவசாயிகள் கடன்களைக் கொடுக்க வேண்டிய காலத்தை நீடிப்பதனால் அவர்களுக்கு நிவாரணம் கிடைத்து விடாது. அவர்களால் தாங்கள் வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்கச் சக்தியற்றவர்களுடைய கடனை ரத்து செய்ய ஒரு சட்டம் நிறைவேற்றினால்தான் அவர்களுக்குக் கண்டிப்பான நிவாரணம் கிடைக்கும் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது விவசாயிகள் கோயில், மடம் தர்ம ஸ்தாபனம் முதலியவைகளில் அதிகப்படியான கடன் வாங்கி இருக்கிறார்கள். விவசாயிகள் அவைகளில் கடன் வாங்கிய காரணத்தினால் கடன்களின் பெயரால் அவர்களை மனைக்கட்டிலிருந்து அப்புறப் படுத்த துரிதமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். அதனால் விவசாயிகள் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகி வருகிறார்கள். இன்னும் அந்தத் தொல்லைகள் அதிகப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அந்தத் தொல்லைகளிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமானால் கோயில், மடம், தர்ம ஸ்தாபனங்கள் முதலியவற்றில் வாங்கியிருக்கும் கடன்களை ரத்து செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய ஒரு சட்டத்தை சர்க்கார் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் இவைகளின் மூலம்தான் விவசாயிகளுக்கு அதிகப்படியான தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கடன்களை ரத்து செய்வதனால் தனி நபர்களுக்கு யாதொரு தொல்லையும் நஷ்டமும் கிடையாது. அதனால்தான் இதை உடனடியாகச் செய்ய வேண்டும். கடன் பேரில் மனைக்கட்டுகளிலிருந்து ஏழை விவசாயிகளையும், ஏழை ஹரிஜனங்களையும் அடிக்கடி துரத்தப்படும் தீமை ஒழிய இதை உடனடியாகச் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதைச் செய்தால் அவ்விதம் அப்புறப்படுத்தப்படுவது நின்று விடும் என்பது என்னுடைய கருத்து.

"இப்பொழுது வாரம் பாக்கி, குத்தகை பாக்கி முதலியவைகளுக்கு கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் இருக்கின்றன. விவசாயிகள் ஏராளமான வட்டி கொடுத்தும் கூட கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த மாதிரியான கடன்களை பரிசீலனை செய்து அந்தக் கடன்களையும் ரத்து செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது.

"கடைசியாக கூட்டுறவு நில அடமான பாங்குகளில் பழைய கடன் பாக்கிகளை கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்வது போல் சர்க்காரே விவசாயிகளுடைய கடன்களைத் தீர்த்துவிட்டு அந்தக் கடனை தவணை தவணையாக வசூல் செய்து கொள்ளும்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் எல்லாம் பெரிய வியாபாரிகளும், லேவாதேவிக் காரர்களும், பெரிய நிலச்சுவாந்தார்களும் தான். அவர்கள் தான் இந்தச் சட்டத்தை எதிர்க்கின்றார்கள். ஏனென்றால் இந்தச் சட்டத்தை ரத்து செய்தால் அந்த வியாபாரிகளும் நிலச்சுவாந்தார்களும் தாங்கள் கொடுத்த கடனை பலவித நிர்ப்பந்தம் செய்து வசூல் செய்வதற்கு இடம் அளிக்கிறது என்பதனால் ஆகவே இந்த சட்டத்தை இன்னும் மூன்று வருஷங்களுக்கு நீடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

[16th December 1954

* SRI M. P. SUBRAMANYAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் என். கே. பழனிசாமி அவர்கள் கடன் ஒத்திவைப்பு சட்டத்தை இன்னும் மூன்று வருஷங்களுக்கு நீடிக்கவேண்டும் என்று கொண்டு வந்துள்ள மசோதாவின் கருத்தை நான் ஆதரிக்கிறேன். இந்த நாட்டிலுள்ள கடன்பட்ட விவசாயிகள் அதிலும் குறிப்பாக சிறிய விவசாயிகள் பாதுகாக்கப்படவேண்டும். சிறிய விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதில் இரண்டு விதமான கருத்துக்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தக் கூட்ட ஆரம்பத்தில் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உரையின்மீது விவாதம் நடந்தபோது இந்தக் கடன் ஒத்தி வைப்பு மசோதாவை நல்ல முறையில் பரிசீலனை செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று தெரிவித்தார்கள். பிப்ரவரி மாதம் 5-தேதி வரையில் அது நீடிக்கிறது. இதை நீடிக்காவிட்டால் விவசாயிகளுக்கு பெரும் தொல்லைகள் ஏற்படும் என்று தெரிவித்தோம். அதற்கு வேண்டி இந்த சட்டத்தை நீடிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். அதன்மேல் அதற்கு வேண்டிய ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்றும் தெரிவித்தார்கள். ஆனால் இப்பொழுதிருக்கும் இந்தச் சட்டம் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுமானால் பல தொல்லைகள் ஏற்பட இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எல்லா மெம்பர்களும் சாதாரண விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று உண்மையாக விரும்புகிறார்கள். அப்படியென்றால், இந்த முறையில் இந்தச் சட்டத்தை நீடித்தால் உண்மையான விவசாயிகள் மட்டும் பலன் அடைவார்கள் என்று சொல்ல முடியாது. விவசாயிகளாக இல்லாதவர்களும், பெரிய நிலப் பிரபுக்களும் பாதுகாப்பைத் தேடிக்கொள்வார்கள். நாட்டிலே உள்ள கடன் வசதிகளெல்லாம் சுருங்கிவிடும் என்ற பலத்த கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டம் இப்பொழுதிருக்கும் முறையில் நீடிப்பது சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

2–50 p.m.

" கடன் கொடுத்தவர்களிடமிருந்து சிறிய சிறிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்ற உண்மையை நாம் மறந்துவிட முடியாது. இப்பொழுது இருக்கும் கடன்பட்ட விவசாயிகள் எந்தக் காலத்தில் கடன் வாங்கினார்கள், இப்பொழுது கடன் திருப்பிக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் பல இடங்களிலிருந்து கடன் வாங்கும்போது அவர்கள் உற்பத்தி செய்த தானியங்களையெல்லாம் நல்ல விலைக்கு விற்றுக்கொண்டு வந்தார்கள். ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினார்களென்றால் இரண்டு ஏக்கரிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு இரண்டு ஆண்டில் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடும்படியான நிலையில் இருந்தார்கள். இப்பொழுது அதே கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு 4 அல்லது 6 ஆண்டுகள் வரையில் ஆகும் என்பதை நாம் மறந்துவிட முடியாது. முன்பெல்லாம் கடன் தொகையை இரண்டு வருஷங்களில் நில வருமானத்திலிருந்து திருப்பிக் கொடுத்துவிடும் நிலையில் இருந்தவர்கள் இப்பொழுது ஏன் அதே காலத்தவணையில் கொடுக்க முடியாமல் நான்கு வருஷங்களுக்கு மேல் ஆகிறது? அதற்குக் காரணம் என்ன? விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு வேண்டிய சாதனங்களின் விலைகளெல்லாம் அதே அளவில் இருக்கின்றன. இரும்பு, ஆடு, மாடுகள் ஆகியவைகளின் விலை பத்து சதவிகிதம் கூடக் குறையவில்லை என்பதை கிராமத்திலிருந்து வந்திருக்கும் உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள். திருப்பிக் கடனைக் கொடுக்கும்போது வட்டியும் முதலும் சேர்ந்து பளுவாகிவிடுகிறது. நெல்லின் விலை ரூ. 30 என்று இருந்தது ரூ. 12, 13 என்று குறையத் தொடங்கிவிட்டது. வாங்கிய கடன் தொகை குறையாமல் இருக்கும்போது திருப்பிக் கொடுக்கும் சக்தி மிகப் பெரிய அளவு குறைந்துவிட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இதைப் பார்க்கும்போது நாட்டிலே விவசாயிகளின் நிலைமை இன்றைக்கு அவ்வளவு சுலபமாகத் தீர்க்கப்படும் எனத் தென்படவில்லை. அவர்கள் குறை தீர்க்கப்படவேண்டுமானால், நல்ல முறையில் அவர்கள் குறைகளை அறிந்து சாதாரண விவசாயிகளுக்கு எப்படிப் பாது

16th December 1954] [Sri M. P. Subramanyam]

காப்பு அளிக்கமுடியும் என்பவைகளை ஆராய்வதற்காக சட்டசபை அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு கமிட்டியை சர்க்கார் ஏற்படுத்தி அதைப்பற்றி ஆலோசிப்பதுதான் சிறந்த முறை என்று நான் நினைக்கிறேன்.

